# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 8

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

இரு புறமும் புற்கள் நிறைந்த குறுகிய பாதையினூடு மலையிலிருந்து முகிலன் இறங்கிக் கொண்டிருந்தான். எதிரே சிறுசிறு கருங்கற்பாறைக் குன்றுகள் காணப்பட்டன. அவற்றின் மறுபுறம் கீழே இறங்குவதற்கு ஏற்ற வகையில் சிறிய படிக்கட்டுகள் வெட்டப்பட்டிருந்தன. முகிலன் அப்படிக்கட்டுகளில் மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினான். படிக்கட்டுப் பாதையின் ஓரத்தில் ஒரு சிறிய சுனை காணப்பட்டது. அந்தச் சுனையில் பளிங்கு போல் தெளிவான நீர் நிரம்பியிருந்தது. அவன் நடந்து வந்ததால் ஏற்பட்ட தண்ணீர்த் தாகத்தைத் தீர்ப்பதற்குச் சுனை நீரை அள்ளிக் குடித்தான். அதனால், களைப்பும் சோர்வும் நீங்கிப் புத்துணர்சியுடன் நடக்கத் தொடங்கினான்.

சிறிது நேரத்தில் மலையின் கீழ்ப்பகுதியை வந்தடைந்தான். மலையடிவாரத்தின் ஒரு பக்கமாகப் பெரிய புல்வெளியும் மறுபக்கத்தில் காடும் காணப்பட்டன. முகிலன் புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த மாடுகளைப் பார்த்தவாறு தனது வீட்டை நோக்கி நடந்தான்.